THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

JANUARY, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஜனவரி, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர்:—A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர்:—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211 தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி:—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.

„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.

„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.

„ A. சாமுவேல் ஐயர், பசுமலை. (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்.

1. அத்தியட்சரின் கடிதம்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. பொக்கிஷதாரின் அறிக்கை
4. இயேசுவின் ஜெபப்பள்ளி.
5. பாடல்கள்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்
சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV பசுமலை, ஜனுவரி 1954 இலக்கம் 3
வருடசந்தா: 1 ரு. 8 அணு. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாக்குளம்,

மதுரை,

15—12—53.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே:—

தென் இந்திய திருச்சபையின் நாலாவது ஸினொடு சங்கம் சென்னையில் ஜனவரி 12-15 வரை நடைபெறும். அத்தியட்சாதீனங்களிலிருந்தும் விசேஷ கமிற்றிகளிடமிருந்தும வரும அறிக்கை ஸினொடுக்கு சமர்ப்பிக்கப்படும். சுயேட்சை ஊழியரை குரு அபிஷேகம் செய்யலாம் என்று நம அத்தியட்சாதீனம கோரியிருப்பதை ஸினொடு பரிசீலனை செய்யும. வருங்காலத்தில் இந்தியாவில் கிறிஸ்தவ சேவையின் போங்கு எப்படி அமையவேண்டும என்ற பிரச்சினையே முக்கியமாய் ஆலோசிக்கப்படும். ஸினொடு கூட்டங்களை தேவ ஆவியானவர் நடத்த சபையாரனைவரும் ஜெபிப்பார்களென்று நம்புகிறேன்.

வருகிற நாலுமாதங்களில் நடைபெறும் ஸ்தோத்திர பண்டிகைகளில் பங்கெடுக்கும்படி நமது அத்தியட்சாதீனத்திலுள்ள எல்லா பாஸ்ட்ரேட்டுகளையும் சந்திக்க எதிர்பார்க்கிறேன். அநேக பாஸ்ட்ரேட்டுகள் இதற்கான ஒழுங்குகளை ஏற்கனவே செய்து வருகின்றன. இந்த ஸ்தோத்திர பண்டிகைகள் மூலமாய் நமது சபைகளும் அங்கத்தினர்களும் தேவ பணிவிடைக்கென்று தங்களைப் புதிதாய் பிரதிஷ்டை செய்யவும், கடன் நிவாரணத்திற்காக தாராளமாய் காணிக்கை கொடுக்கவும் ஜெபிக்கும்படி உங்களைக் கேட்கிறேன்.

அடுத்த ஆண்டின் ஆரம்பத்திற்குக் கடவுள் நம்மை கொண்டு வந்திருக்கிறார். வருகிற வருஷத்தில் கடவுள் நமக்காகப் பெரிய ஆசீர்வாதங்களை நிரம்ப வைத்திருக்கிறார் என்று நம்புகிறேன். ஆகையால் நம்பிக்கையோடும், சந்தோஷத்தோடும் புதிய ஆண்டை எதிர்

பார்க்கிறேன். நாம் யாவரும் விசேஷமாய் ஜெபிக்கும்படி நம்மை அழைக்கிறார். சபைக்கு ஆவியானவர் புத்துயிர் அளிக்கும்படி நாம் ஜெபித்துக்கொண்டு வருகிறோம். "அன்புள்ள கர்த்தாவே உமது அருள்மாரி என்மேலும், சபையின்மேலும், உலகத்தின்மேலும் பெய்யச்செய்தருளும்" என்று குருமார் செய்து வரும் ஜெபத்தை நீங்கள் அனுதினமும் உபயோகிப்பீர்களென்று நம்புகிறேன். பூமியின்மேல் ஏராளமான மழையை வருஷிக்கப்பண்ணின கடவுள் தமது திருச்சபை அலங்காரமாயும், கனிகொடுக்கக்கூடியதாயுமிருக்கத்தக்க அருள்மாரியை நிச்சயமாகவே பெய்யப்பண்ணுவார். பச்சையான விளைநிலங்களை நான் பார்க்கும்போது, திருச்சபைக்குக் கடவுள் கொடுக்கக்கூடிய புதிய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்திற்கு அறிகுறியாய் இருக்கிறது.

புது வருஷத்தை நாம் சிலவேளைகளில் அங்கலாய்ப்போடு எதிர்பார்க்கிறோம். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று நமதருள் நாதர் கூறுகிறார். கவலைப்படுவது "அஞ்ஞானிகளுடைய" இலட்சணம் என்று அவர் உரைக்கிறார். (மத். 6 : 31-32) முழுமனதோடு கடவுளுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடும்போது கவலைகளிலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம். (வ-33) இப்படிப்பட்ட மேலான அவர் இருக்கும்போது மற்றெல்லாச் சிறிய ஆசைகளும் எரிக்கப்பட்டுப்போம். நாமும் கவலையினின்று விடுதலையடைவோம்.

"பிதாவே திருச்சபையில் உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக. உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக" என்ற ஒரே ஆசையோடு 1954ம் ஆண்டிற்குள் பிரவேசிப்போம். இப்படிச் செய்தால் நமக்குத்தேவையான எல்லாவற்றையும் அவர் நிச்சயமாகக் கூடக்கொடுப்பார்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியக்ஷர்.

அத்தியக்ஷரின் அலுவல்கள்

ஜனவரி	11	சென்னை ஸினடு குருத்துவக்கமிற்றி
	12 – 15	சென்னை ஸினடு சங்கம்.
	17	கேப்ரன் ஹால்—ஆசிரியர்கள் கூட்டம்.
	17 – 18	திருப்புவனம்

ஜனவரி	23—24	கம்பம். பச்சை குமாச்சி மலை—திடப் படுத்தல்
	27	கோம்பை—ஸ்தோத்திரப்பண்டிகை
	29	சிவகங்கை ,, ,,
	31	பழனி ,, ,,
பெப்ரவரி	1.	ஒட்டன் சத்திரம் ,,

திருச்சபைச் செய்திகள்.

1. சபையின் திருநாட்கள்.

பெப்ரவரி	2	சுத்திகரிப்புத் திருநாள்.
	7	பிரசன்னத் திரு பின் ஞாயிறு கி.மு. சங்க ஞாயிறு.
	14	செப்துவ கெசிமா ஞாயிறு ஆஸ்பத்திரி ஓய்வுநாள்.
	21	செக்சகெசிமா ஞாயிறு
	24	பரி. மத்தியாவின் திருநாள்
	28	கின்குவகெசிமா ஞாயிறு

2. அபிஷேகநாதர் ஆலயம், மதுரை. ஜெப சங்கிலித் தொடர்.

ஆவிக்குரிய எழுப்புதலுக்கு அடிப்படையாக, நமது அத்தியட்சாதீனத்தில் இவ்வருஷம், ஓர் ஜெபவருஷமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பல இடங்களிலும் சிறு சிறு ஜெபக்கூட்டங்கள் உருவாகியிருக்கின்றன. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவ்வாறு உருவான எங்களுடைய ஜெபக்கூட்டம் ஒன்றில், சபையின் எழுப்புதலுக்காகத் தொடர்ந்தேர்ச்சியாக 24 மணிநேரம், ஆலயத்தில் ஜெபம் ஏறெடுக்கப்படவேண்டுமென்ற யோசனை பிறந்தது. இந்த யோசனை ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் அறிவிக்கப்பட்டபோது, ஆண்களும், பெண்களும், வாலிபரும் வயோதிபருமாக 24 பேர் ஜெப சங்கிலியில் சேர உற்சாகமாக முன் வந்தார்கள். 27—11—'53 வெள்ளிக்கிழமை மாலை 6 : 30 மணிக்கு ஓர் விசேஷித்த ஆராதனை, ஆலயத்தில் நடைபெற்றது. ஜெபம் முடிந்ததும் ஜெப சங்கிலியில் சேர்ந்தவர்கள் யாவரும் கூடினார்கள். சபைகுருவினால் இதின் நோக்கம், முறைகள் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டு, ஒருவர் மாற்றி ஒருவர் ஜெபித்தார்கள். இந்த ஜெபக்கூட்டத்திற்குப் பின் இரவு 8 மணிக்கு ஜெப சங்கிலி ஆரமபமாகி, ஒருவர்

மாற்றி ஒருவர் ஒவ்வொருமணி நேரம் அனலோடு ஜெபித்தார்கள். ஜெபக்குறிப்புகள், தியான புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஜெப சங்கிலியில் சேர்ந்தவர்கள் தவிர, வேறு சிலரும் இடைக்கிடையே வந்து ஜெபித்தார்கள். 28 – 11—53 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு எல்லோரும் மறுபடியும் ஒன்றுகக்கூடி தங்களுக்குக் கிடைத்த புது அனுபவம் உற்சாகத்தைப்பற்றி சாட்சி கூறி கடவுளைத் துதித்துப்பாடி ஜெபித்து, சந்தோஷத்தோடு வீடு திரும்பினார்கள். நமது அத்தியட்சாதீனத்திலுள்ள ஒவ்வொரு பாஸ்றறேட்டிலும், ஒவ்வொரு ஸ்தாபனத்திலும ஒரு நாள் இவ்வாறு ஜெப நாளாகக் குறிக்கப்பட்டு, தொடர்ந்தேர்ச்சியாக ஜெப சங்கிலித்தொடர் அத்தியட்சாதீனமுழுவதிலும நடைபெறவேண்டுமென்பது எங்கள் அவா. அவ்வாறு நடைபெற்றால் மெய்யாகவே ஓர் பெரிய ஆவிக்குரிய எழுப்புதல் நமது அத்தியட்சாதீனத்தில் ஏற்படுமென்பது எமது நம்பிக்கை.

“ஜெப சிந்தை எனில்தாரும் தேவா—என்னை
அபயமென்றுனக்குக்கை அளித்தேன் பொற்பாதா
இடைவிடாமல் செய்யும் எண்ணம்—என்
இதயத்தில் உதயமாய் இலங்கிடப்பண்ணும்”

என்று மதுரை இளந்தோப்பு கனம் ஆர்தர் ஐயர் எழுதுகிறார்.

3. அகில உலக ஓய்வுநாட் பாடசாலைத் தினம் :—

மேலூர் கஸ்பா திருச்சபையைச் சேர்ந்த ஓய்வுநாள் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து அகில உலக ஓய்வுநாட் பாடசாலைத் தினம் கொண்டாடினார்கள்.

அவ்வமயம் முதன் முதலாக ஓய்வுநாட் பாடசாலை ஏற்படுத்திய உயர்திரு. ராபர்ட் ரெய்க்ஸ் பெரியாரின் வாழ்க்கையை ஓர் நாடகமாக நடித்துக் காட்டினார்கள்.

சபை குருவானவர் சங்கை செல்லையா ஐயரவர்கள் தலைமை தாங்கி ஓய்வுநாட் பாடசாலையின் மூலமாக நமது கிறிஸ்தவ பிள்ளைகள் அடையும் நன்மைகளும், வேத அறிவும் எத்தனை பெரிது என்று அனுபவசாட்சியாக விளக்கிக்காட்டினார்கள்.

வந்திருந்த பெற்றோர்கள் யாவரும் தங்கள் பிள்ளைகளை ஓய்வு நாட் பாடசாலைக்குத் தவறாமல் அனுப்பவேண்டுமென்ற தீர்மானத்துடன் தம் வீடுகளுக்குச் சென்றனர். இவ்வருடம் மேலூர் கஸ்பா திருச்சபையில் 26 மாணவர்கள் அகில இந்திய ஓய்வுநாட் பாடசாலை பரீட்சை எழுதியிருக்கிறார்கள்.

இந்த ஓய்வுநாள் பாடசாலை அதிகமாக வளர உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளும்படி ஆசிரியர் திரு. கிறிஸ்டோபர் ஸ்டீவன்ஸன் எழுதுகிறார்.

4. கல்லிமந்தயம் வட்டகையில் கிராம முன்னேற்ற ஊழியம்.

அத்தியட்சாதீனக் கிராம முன்னேற்றக் குழுவினரால் மன்ற வாடியில் இந்த வருடம் சுகாதார ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இது அமுலுக்கு வந்தசமயம் டாக்டர் தாமஸ் அவர்களும டாக்டர் ஞானையா அவர்களும பிரசன்னமாயிருந்தனர். மன்றவாடியில் படித்துத்தேறிய ஓர் மருத்துவச்சி நியமிக்கப்பட்டிருக்கிறாள். மாதத்திற்கு இருமுறை டாக்டர் ஞானையா அவர்கள் இங்கு விஜயம் செய்து வேலையை மேற்பார்த்து வருகிறார்கள். கிராம முன்னேற்றத்தின் ஓர் பாகமான இந்த சுகாதார ஊழியமும் சித்தியாய் நடைபெறும்படி ஜெபிக்கக் கிராம ஊழியத் தலைவர் கனம் செல்லப்பா அவர்கள் கேட்கிறார்கள்.

5. கனம் டி. மாணிக்கம் அவர்களின் பிரிவு.

தென் தமிழ் மாகாண பாரதக் கிறிஸ்தீய சேவக சமாஜத்தின் தலைவராகப் பல வருடங்களாய்ப் பணியாற்றிய ஸ்ரீ டி. மாணிக்கம் அவர்கள் நவம்பர் மீ 26 உ கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்களென்பதைத் துக்கத்துடன் அறிவிக்கிறோம். அன்னவரின் வயது 75. திண்டுக்கல்லுக்குப் பக்கமுள்ள மானகிரி அம்மாபட்டியில் 1878ல் பிறந்தார். பசுமலையின் உயர்தரக் கல்லூரியில் பண்டிதர் உவாஷ்பர்ன் அவர்களின் மாணவராயும், அதன்பின் சென்னை கிறிஸ்தவ உயர்தரக் கல்லூரியிலும் படித்து பீ. ஏ. பட்டம் பெற்றார். 1909ல் கனம் தங்கம்மாள் அவர்களை மணந்தார். விவாகம் பண்டிதர் சாண்டிலர் அவர்களால் நடத்தப்பட்டது.

ஆரம்பத்தில் காஞ்சீபுரத்திலுள்ள மிஷன் கல்லூரியில் ஆசிரியராயிருந்து பின் 1903ல் சர்க்கார் ஊழியத்தை ஒப்புக்கொண்டார். அதுமுதல் ஓய்வெடுத்துக்கொள்ளும காலபரியந்தம் படிப்படியாய் டிப்டி கலெக்டர் ஆகுமவரை பல இடங்களில் ஊக்கமாயும் உற்சாகமாயும் உழைத்தார்.

இவரது ஊழியம் சர்க்காரில் இருந்தபோதிலும் சபைக்காரியங்களில் ஆர்வமுடையவர். சபைகளிலுள்ள பல ஸ்தாபனங்களுக்கு அவர் கொடுத்திருக்கும் நன்கொடையே அவரது மனத்தாராளத்தையும் சபைக் கைங்கிரியங்களிலுள்ள ஆர்வத்தையும காட்டுகிறது. மேலும் பாரதக் கிறிஸ்தவ சங்கத்தின் தலைவராயிருந்து பணியாற்றியது அவரது சுவிசேஷ வாஞ்சையைக் காட்டுகிறது. அவரால் நன்மையடைந்தவர் பலர். அவர் தமது பொருளாலும் சேவையாலும் தொண்டு செய்தது திருச்சபையிலுள்ள நமக்கு ஓர் எடுத்துக் காட்டு. அவர் விட்டுப் போயிருக்கும் அவரது அருமைத் துணைவிக்கும இதர இனஜன பந்துக்களுக்கும உலகம் தரக்கூடாத சமாதானத்தைக் கடவுள்தாமே அருளும்படி ஜெபிப்போமாக.

6. மதிப்புரை.

"ஜனநாயகப் புரட்சியும் பொது உடைமைக் கட்சியும்—கிறிஸ்தவ விளக்கம்" என்ற தலைப்புடைய ஓர் புஸ்தகம் மதுரை இராமநாதபுர அத்தியட்சாதீனக் கிறிஸ்தவ இலக்கிய குழுவினரால் வெளியிடப் பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் இந்திய சூழ்நிலைக்குத் தகுந்தவாறு எழுதப்பட்ட இந்நூலை ஆசிரியர் வீ. ஜெயராஜ் தமிழில் எழுதியிருக்கிறார். இது 90 பக்கங்கள் கொண்டது பொது உடைமை என்றால் என்ன? மதத்தைப் பற்றியும ஒழுக்கத்தைப் பற்றியும் பொது உடைமையின் போதனை என்ன? சமூகப்புரட்சியைப் பொது உடைமை எப்படி வஞ்சிக்கிறது? உண்மையான சமுதாய ஜனநாயகம் எது? திருச்சபைக்கும் பொது உடைமைக்குமுள்ள சம்பந்தம் என்ன? அதின் அறைகூவலுக்குத் திருச்சபையின் விடை யாது? என்ற பல தலைப்புக்களடங்கிய அத்தியாயங்கள் உண்டு. புஸ்தகத்தின் பொருளும் நடையும் எல்லாரும் விளங்கிக்கொள்ளத்தக்க விதமாய் ஆசிரியர் எழுதியிருக்கிறார். தற்காலத்தில் இப்பொருளை அநேகர் சரியான படி விளங்கிக்கொள்ளாததால் உணர்ச்சிக்கிடங் கொடுத்து, தப்பறையான போதனைகளை நம்பி, ஆபத்திற்கிடமான போக்கை அனுசரிக்கின்றனர் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இப்படிப்பட்ட கொள்கையின் உண்மைத் தத்துவத்தை விளங்கிக்கொள்ள எல்லார் வசமும் அவசியமாய் இருக்க வேண்டிய புத்தகம் இது. இதன் விலை ரூபாய் ஒன்று. ஆனால் சகலரும எளிதில் வாங்கி வாசிக்கும் நோக்கமாய் இது 0-8-0க்கு விற்கப்படும். புஸ்தகம் வேண்டியவர்கள் மதுரையிலுள்ள நமது புத்தக டிப்போவிற்காவது, அல்லது பசுமலையிலுள்ள கனம் லார்பியர் துரையவர்களுக்காவது எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

7. பழைய "புத்துயிர்", "சத்தியவர்த்தமானி" தேவை.

கிராமங்களிலுள்ள சுயேட்சை ஊழியர் பலருக்கு வாசிக்கக் கூடிய புஸ்தகங்களும் பத்திரிகைகளும் இல்லை. மேற்கூறிய பத்திரிகைகளில் பழையவை உங்கள் வசமிருக்குமானால் அவைகளை சுயேட்சை ஊழியரின் உபயோகத்திற்காகப் பசுமலை கனம் உவைட் அம்மாளுக்கு அனுப்பிவைக்க அன்புடன் கேட்கிறோம். சுயேட்சை ஊழியரை அவர்கள் ஊழியத்தில் உற்சாகப்படுத்த இது உபயோகப் படும்.

அத்தியட்சாதீனப் பொக்கிஷதாரின் அறிக்கை

மதுரை—ராமநாதபுரம் அத்தியட்சாதீன சபையார் யாவருக்கும் என் நவவருட வாழ்த்துதல். கடந்த ஆண்டில் கடவுள் நம்மைக் கருணையாய் எல்லாவித இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி வழி நடத்தி வந்ததுபோல வருகிற ஆண்டிலும் நம்மை நடத்த ஊக்கமாய் ஜெபிப்போம. மேலும் அனுதினமும நம் செய்கை, பேச்சு, எண்ணம் யாவும்தேவனுக்கு மகிமையுண்டுபண்ணுவதாயிருக்க தேவன் கிருபை செய்வாராக.

கிறிஸ்தவ மிஷன்கள் அகவிருள் அகற்றி அறிவொழி வீசும்படியாக கல்வி ஸ்தாபனங்களையும், கைத்தொழில் ஸ்தாபனங்களையும் மக்கள் ஆரோக்கியமாயிருக்கத்தக்கதாக வைத்திய ஸ்தாபனங்களையும் ஸ்தாபித்து ஜாதி, மதபேதமின்றி புனித வேலை செய்துவரும் கொள்கையை பின்பற்றி நம அத்தியக்ஷாதீனத்திலும் கல்வி ஸ்தாபனங்களும், வைத்திய ஸ்தாபனங்களும் சேவை செய்து வருகின்றன. தொழிற் கல்வியின் முக்கியத்தைக் கருதி பசுமலையில் ஆண்களுக்கென்று கைத்தொழிற்சாலையும், ரக்ஷண்யபுரத்தில் பெண்களுக்கென்று ஓர் ஸ்தாபனமும நடைபெற்று வருகின்றன. ஆசிரியப் பயிற்சிசாலை பசுமலையிலும், வத்தலக்குண்டிலும் ஆசிரியைப் பயிற்சிசாலைகள், மதுரையிலும, திருமங்கலத்திலும் நடைபெறுகின்றன. உயர்தரக் கலாசாலைகள் ஆறும், மத்தியப் பாடசாலைகள் இரண்டும், உயர்தர ஆரம்பப் பாடசாலைகள் பத்தும், ஆரம்பப் பாடசாலைகள் 149ம் வேலை செய்து வருகின்றன.

இவ்விதமான ஸ்தாபனங்களுக்கு வேண்டிய கட்டிடங்களுக்கும், பர்ணிசர் முதலியவைகளுக்கும் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டதுடன், இந்த ஸ்தாபனங்களை நடத்தி வருவதில் வருஷாவருஷம் பெரும் தொகைகள் செலவிடப்பட்டு வருகிறது.

அத்தியக்ஷாதீனக் கல்வி ஸ்தாபனங்களில் தொழிற் கல்வி ஸ்தாபனம்—மாணவர் சம்பளங்களிலும் ஆகாரக் கட்டணங்களிலும் ஏழைமக்களுக்கு உதவிசெய்து வருகின்றன—1952—53ஆம் கணக்கு மட்டும்.

	ரூ.		ரூ.
பசுமலை உயர்தரப் பாடசாலை	1380	கேப்ரன்ஹால் போதனுமுறை பாடசாலை	2853
அமெரிக்கன் கல்லூரி உயர்தரப் பாடசாலை	525	ஓ. சி. பி. எம் உயர்தரப் பாடசாலை	1600
ஸ்வார்ட்ஸ் உயர்தரப் பாடசாலை	1162	பரி. அன்ட்ரூஸ் உயர்தரப் பாடசாலை	2141

	ரூ.		ரூ.
ஸ்ரீவில்லிபுத்தூர் உயர்தரப் பாடசாலை	2195	பசுமலை கைத்தொழில் கல்வி சாலை	6110
		ரக்ஷண்யபுரம் தொழிற் கல்வி சாலை	12250

அத்தியக்ஷாதீன ஆஸ்பத்திரிகள் கீழ்க்கண்ட இடங்களில் அதிகச் செலவில் ஏழை மக்களுக்கு இலவச சிகிச்சை, சிறந்த செலவில் சிகிச்சை, ஆகார வசதி கொடுப்பதில் ஏராளமான தொகை செலவழித்து வருகின்றன. புள்ளிவிபரங்கள் பின்னால் கொடுக்கப்படும்.

மதுரை, ஆண்கள் வைத்தியசாலை
மதுரை பெண்கள், பிள்ளைகள் வைத்தியசாலை
ராமநாதபுரம் பரி. மார்டின் வைத்தியசாலை
கிளாஞ்சுனை வைத்தியசாலை

கடந்த சில வருஷங்களில் ஏற்பட்ட மழைதாட்சியின் பயனாக வந்த பஞ்சத்தினால் பஞ்சநிவாரணத்திற்கென்று ஓர் நிதி ஏற்படுத்தப் பட்டது.

அதன் சம்பந்தமாய் செய்யப்படும் வேலை

1953ம் ஏப்ரல் மாதத்திற்கு முன் பஞ்சநிவாரண நிதியிலிருந்து பின்வரும் இடங்களில் காட்டப்பட்டிருக்கும் தொகைகள் செலவில் கிணறுகள் தோண்டவும், ஆழமாக்கவும்பட்டிருக்கிறது.

வடக்கு லோக்கல் கவுன்சில்	ரூ.	ராமநாதபுரம் லோக்கல் கவுன்சில்	ரூ
அனுப்பபட்டி	166	இளங்களம்பூர்	400
அரியபார்தம்பட்டி	248	கீரனூர்	200
நவகாணி	400	மேலக்காவனூர்	300
மண்டவாடி	400	கீழக்காவனூர்	200
புதுக்கோட்டை	310	வீராம்பல்	150
பொருளூர்	500	மாரியூர்	200
கொட்டாரப்பட்டி	150	அரியகுடி புதூர்	250
கிழக்கு லோக்கல் கவுன்சில்		செட்டூர் & விளாத்தூர்	600
செல்லையாபுரம்	350	வெங்குளம் (ஊரணி)	500
சாத்தரசன்கோட்டை	350	ராம்நாட், பரமகுடி (கில்ட் ஆப்சர்வீஸ் மூலம்)	500
முடித்தாணை	350		
பனகுடி	350		

	ரூ.
வான்புரம்	300
வேளாரேந்தல்	350
புளியடிதர்மம்	150
மத்தியலோக்கல் கவுன்சில்	
கொசவங்குண்டு	300

தெற்கு லோக்கல் கவுன்சில்	ரூ.
அத்திபட்டி	450
கிறிஸ்தவ மங்கலம்	400
புதுக்குளம்	325
மேற்கு லோக்கல் கவுன்சில்	
அடைக்கலம்பட்டி	400
பனையடிபட்டி	150
ஆகமொத்தம்	9649

1953௵ ஜூன் மாதத்தில் பஞ்சநிவாரண நிதியிலிருந்து கீழ்க் கண்டபடி தொகைகள் சாங்ஷன் செய்யப்பட்டு அதிகமான வேலைகள் முடிவடைந்து வருகிறது.

வடக்கு லோக்கல் கவுன்சில்	ரூ.
அனுப்பப்பட்டி	100
காரத்துபட்டி	150
நாயக்கன்கோட்டை	100
வெள்ளைய கவுண்டனூர்	100
ஆண்டர்சன்பட்டி	120
சுக்காம்பட்டி	120
கிழக்கு லோக்கல் கவுன்சில்	
மேலூர்	50
வான்புரம்	75
வன்னிக்குடி	50
கோவனூர்	400
திருவாடானை	200
பனகுடி	50
பெரும்பாவயல்	350

தெற்கு லோக்கல் கவுன்சில்	ரூ.
மூன்றடைப்பு	75
மேலராமன்பட்டி	150
அத்திபட்டி	174
காடமங்கலம்	450
சுத்தமடம்	100
தெற்கு நத்தம்	100
மத்திய லோக்கல் கவுன்சில்	
திருமங்கலம்	75
ராமநாதபுரம் லோக்கல் கவுன்சில்	
வெங்குளம்	200
விளாத்தூர்	250
மேற்கு லோக்கல் கவுன்சில்	
சாண்டலர்புரம்	200
வீரபாண்டி	124
போடி	116
மணியகாரன்பட்டி	230
ஆகமொத்தம்	4109

மதுரை வடக்கு யூனியன் பாஸ்ட்ரேட்டைச் சேர்ந்த வலசை கிராமத்தில் வீடுகள் தீப்பிடித்து நஷ்டமடைந்தவர்களுக்கு 30–6–53ல் ரூபாய் 280/- உதவி வடக்கு யூனியன் பாஸ்ட்ரேட் மூலமாக பட்டுவாடா செய்யப்பட்டது.

1952—53ல் ஏழைப் பிள்ளைகளின் பள்ளிக்கூட சம்பள பாக்கிகளை கொடுத்து உதவ பின்வருமாறு தொகைகள் கொடுக்கப்பட்டது.

	ரூ.		ரூ.
மேற்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	652	வடக்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	640
தெற்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	198	மத்திய லோக்கல் போர்டிங் ஸ்கூல்	247
கிழக்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	78	சாட்சியாபுரம் லோக்கல் கவுன்சில்	6
		ஆகமொத்தம்	1821

1953ம் வருஷ கோடை விடுமுறையிலும், செப்டம்பர் விடுமுறையிலும் அந்தந்த பள்ளிக்கூடங்களில் டே பிள்ளைகளை வைத்து சம்ரக்ஷணை செய்ததில் செலவிடப்பட்ட தொகைகளின் விபரம்.

	ரூ.		ரூ.
பரி. அந்திரேயா ஸ்கூல்	109	கிழக்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	285
ரக்ஷண்யபுரம் ஸ்கூல்	168	வடக்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	420
தெற்கு லோக்கல் போர்டிங் ஸ்கூல்	420		
		ஆகமொத்தம்	1402

1952ல் மேற்படி விஷயமாக ரூ. 500/- செலவிடப்பட்டது. அத்தியக்ஷாதீன ஸ்காலர்ஷிப் நிதியிலிருந்து ஏழைமக்களுக்கு 1952-53ல் ரூ. 4029 உதவி கொடுக்கப்பட்டது.

1953—54 வருஷத்தில் ரூ. 7200 உதவி சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

போர்டிங்ஸ்கூலில் படிக்கும் ஏழைமக்களுக்கு பின் கண்டபடி உபகாரத் தொகைகள் கொடுக்கப்பட்டன :

	மாணவர்	1951—52	1952—53
வடக்கு லோக்கல் போர்டிங்ஸ்கூல்	36	1430	858
கிழக்கு „ „	58	1510	755
தெற்கு „ „	56	1710	855
மத்திய „ „	14	610	305
மேற்கு „ „			
ராம்நாட் லோக்கல் கவுன்சில்	29	968	479

1953ம் வருஷத்தில் கிராம பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு மதிய உணவளிப்பதில் ரூ. 7000 சாங்ஷன் செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது.

வொர்ல்ட் ரேபர்ஸ் கியூபிகின் நிதியிலிருந்து கீழ்க்கண்டபடி உதவி செய்யப்பட்டன.

	ரூ.		ரூ.
தோல் தொழில்சாலை	500	கூடைமுடையும் தொழில்	100
ஆடுகள் வளர்க்கும் தொழில்	200	„ „	100
பாய்பின்னும் தொழில்	120	சுக்கான்பட்டி	130
		நெசவாளர் தொழில்	1000
		ஆகமொத்தம்	2150

1952—53ல் சுகாதாரசேவை; வியாதி தடுப்புமுறை வேலைக்காக ரூ. 1501 செலவிடப்பட்டது. 53—54லும் தொடர்ந்து வேலை நடந்து வருகிறது.

1953—54ல் மண்டவாடியில் ஓர் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பயிற்சி பெற்ற மருத்துவ பெண் நியமிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

அத்தியக்ஷாதீனத்தின் பற்பல ஊழியர்களுக்காக இடைவிடாமல் ஜெபித்து வரும்படியும், அவைகளை ஆதரிக்கவும், பராமரிக்கவும் உங்களனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் அனுபவித்துவரும் எல்லா ஈவுகளுக்காகவும் தேவனுக்கு நன்றி

செலுத்துவோமாக. நம்மைவிட எளிய நிலைமையில் இருப்பவர்களோடு, நமக்கிருக்கும் நன்மைகளை நாம் பகிர்ந்துகொள்வதால் நமது நன்றியைக் காட்டுவோமாக. எந்த அளவுக்கு நாம் பகிர்ந்தளிப்போமோ, அந்த அளவு நாம் சந்தோஷமடைவோம். அப்போதுதான் வாங்குகிறதைப் பார்க்கிலும், கொடுப்பதே பாக்கியம் என்ற உண்மையை நாம் ரூபித்துக் காட்டுவோம். உங்கள் யாவருக்கும் என் புதுவருஷ வாழ்த்துதல்.

உங்களன்புள்ள ஊழியன்,

ஜி. ஜி. ஜாஷ்வா,

அத்தியட்சாதீன பொக்கிஷதார்.

இயேசுவின் ஜெபப்பள்ளி.

மூன்றும் பாடம்.

அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு அல்லது கடவுளோடு தனித்திருத்தல்.

'நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன்பிதா வெளியரங்கமாய் உனக்குப்பதிலளிப்பார் ; (மத். **6 : 6.**)

இயேசுநாதர் தமது முதல் சீடர்களை அழைத்த பிறகு, அவர்களுக்குத் தமது மலைப்பிரசங்கத்திலேயே முதலாவது பகிரங்கப் போதனையைக் கொடுத்தார். தேவனுடைய இராஜியத்தையும், அதன் பிரமாணங்களையும், அதற்கேற்ற ஜீவியதத்தையும்பற்றி அதில் அவர் விளக்கினார். அந்தத் தேவனுடைய இராஜியத்தில் கடவுள் இராஜாதி இராஜனாக மாத்திரமில்லாமல் பரமபிதாவாகவும் இருக்கிறார் அவர் எல்லாவற்றையும் கொடுக்கிறவராக மட்டுமல்ல. அவரே எல்லாமுமாயிருக்கிறார். அவரைப்பற்றிய அறிவிலும், அவரோடு வைக்கிற ஐக்கியத்திலுமே தேவனுடைய இராஜியத்தின் ஆசீர்வாதமிருக்கிறது எனவே அவர் நிலைநாட்டும்படியாக வந்த புதிய இராஜியத்தைப் பற்றிய அவரது போதனையில், ஜெபத்தைப்பற்றிய வெளிப்படுத்தலும் ஜெப ஜீவியமும் இடம் பெற்றன. ஜெபத்தைப்பற்றி மோசேயானவர் பிரமாணமோ சட்டதிட்டமோ எதுவும் கொடுக்கவில்லை. தீர்க்கதரிசிகளும்கூட நேரடியாக ஜெபத்தைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. கிறிஸ்துவே ஜெபத்தைப்பற்றிய போதனையைத் தந்தருளினார்.

ஆண்டவர் போதிக்கிற முதலாவது விஷயம் என்னவெனில் ஜெபத்திற்காக ஒரு தனி இடம இருக்கவேண்டுமென்பதே. தேவ

ளேடு தனித்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு தனி இடம் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியனுக்கும ஒரு தனி வகுப்பறை இருக்க வேண்டும். ஜெபப்பள்ளியில் இயேசுநாதரை மட்டுமே நமது ஒரே குருவாராக ஒப்புக்கொள்ளக் கற்றிருக்கின்றோம். ஏற்கனவே சமாரிய ஸ்திரீயோடு செய்த சம்பாஷணையின் மூலமாக, காலங்களுக்கும் இடங்களுக்கும் ஆராதனை கட்டுப்பட்டதன்று என்று அவர் நமக்குப் போதித்திருக்கின்றனர். உண்மையான ஆராதனையானது ஆவியையும் ஜீவியத்தையும் பொருத்ததாகும். முழு மனிதனும் தனது முழு ஜீவியத்தில் ஆவியோடும் உண்மையோடும் தொழுகிறவனாயிருக்கவேண்டும். என்றபோதிலும், ஒவ்வொருவரும் அவரைத் தினசரி சந்திப்பதற்காக ஒரு குறிப்பிட்ட தனியிடத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார் அப்படிப்பட்ட தனி இடம் இயேசுவின் ஜெபப்பள்ளி அறையேயாகும். அந்தத்தனி இடம் எங்கும் இருக்கலாம். நமது வாசஸ்தலம் மாறினால் அந்தத் தனியிடமும் மாறும். ஆனால் அவ்விடம அமைதியும் ஆண்டவர் பிரசன்னமும் நிறைந்து பரமபிதாவையே ஆராதனை செய்வதற்கு ஆண்டவர் நம்மை ஆயத்தம் செய்யக்கூடியதாயிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான், நமக்கு ஜெபிக்கப்போதிப்பதற்கு ஆண்டவர் நிச்சயமாய் வருவார்.

தனது பள்ளி அறை பிரகாசமும், கவர்ச்சியும் பொருந்தியிருக்கவும், பரலோக ஜோதியும, பரலோகத் தன்மையும் நிறைந்ததாயிருக்கவும், மாணவர் ஆவலோடு வந்து அங்கு தங்கியிருக்கத்தக்கதாயிருக்கவும் எப்போதும் ஒரு ஆசிரியன் கவலைப்படுகிறான். மலைப் பிரசங்கத்தில் தமது ஜெபத்தைப்பற்றிய தமது முதற்போதனையில், அப்படிப்பட்ட ஒரு அந்தரங்க அறையினையே ஆண்டவர் நம முன் வைக்கிறார். ஆழ்ந்து சிந்தனை செய்தால், பரமபிதாவின் நாமத்தை மும்முறை அவர் உபயோகிப்பது புலப்படும். 'உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு' 'உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பதிலளிப்பார்' (மத். 6 : 6) 'நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் (பரமபிதா) அறிந்திருக்கிறார்' (மத். 6 : 8.) நமது அந்தரங்க ஜெபத்தின் முதற்காரியம, நமது பரமபிதாவைச் சந்திக்கவேண்டும் என்பதேயாகும். அந்த அறை வீட்டுக்குள் பிரகாசிக்கிற வெளிச்சம பரமபிதாவின் பிரசன்னமாகிய வெளிச்சமாயிருக்கவேண்டும. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் நிரப்பப்படும் அந்தப் பரலோகப் புதிய காற்றிலேயே நாம் சுவாசிப்பதாகவும ஜெபிப்பதாகவும் இருக்கவேண்டும். கடவுளாகிய பிதாவின் அன்பும், அவரது முடிவற்ற பிதாத்துவமே அப்புதிய பரலோகக் காற்றாகும். இவ்விதமாக நாம் வெளிவிடுகிற ஒவ்வொரு எண்ணமும, விண்ணப்பமும், எளியதாகவும், இருதயப் பூர்வமானதாகவும், ஒரு குழந்தையின் நம்பிக்கையைப் போன்ற

தாகவும் இருக்கவேண்டும். இவ்விதமாகவே ஆண்டவர் நமக்கு ஜெபிக்கப் போதிக்கிறார். பரமபிதாவின் உயிருள்ள பிரசன்னத்திற்குள் அவர் நம்மைச்சேர்க்கிறார். ஆண்டவர் நமக்குச் சொல்ல வேண்டியவற்றைக் கேட்கக்கவனமாய்ச் செவி கொடுப்போமாக.

'முதலாவது, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு'. மாமிசக்கண்களுக்கு மறைவாகவே தேவன் இருக்கிறார். நமது ஆராதனையில், நமது சொந்தச் சிந்தனைகளிலும் முயற்சிகளிலும் நாம் பெரிதும் ஆழ்ந்திருக்கும் வரைக்கும், அரூபப்பொருளான அல்லது கருத்துப்பொருளான, ஆவியானவரைச் சந்திக்கவே முடியாது. ஆனால் இந்த உலகக்காரியங்களுக்கும், மக்கள் தொடர்புகளுக்கும் முற்றும் விலகிக் கடவுளுக்காகக் காத்திருக்கத் தன்னை ஆயத்தப்படுத்தும் மனிதனுக்கோ கடவுள் தம்மை நிச்சயமாய் வெளிப்படுத்துவார். உலகையும் அதன் வாழ்க்கையையும் அறவே வெறுத்து அதனை அப்புறப்படுத்தி, கடவுளின் அந்தரங்கப் பிரசன்னத்திற்குள் தன்னை நடத்தும்படி அவன் தன்னைத்தானே முழுவதுமாகக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கிறபடியால், பரமபிதாவின் அன்பான ஜோதி அவன்மேல் பிரகாசிக்கும். உள்ளறையின் இரகசியமும், வெளியுலகிலிருந்து விடுதலை பெற்றுத் தனித்திருப்பதுவும், திரைக்குள்ளிருக்கும் கடவுளின் அந்தரங்க ஆசரிப்புக்கூடாரமான அந்தரங்க ஆத்மீக பரிசுத்த ஸ்தலத்தின் சாயலாக இருக்கின்றன. அங்குதான் அரூபப்பொருளான ஆண்டவரோடு நமது ஆவி ஒன்றுபடுகிறது. இது காரணம்பற்றியே வல்லமையுள்ள ஜெபத்தின் இரகசியத்தைத் தேடுவதில் பரமபிதாவோடு தனித்திருந்து, சரியானபடி நமது ஜெபங்களை ஏறெடுப்பதற்கு உள்ளறை வீடே தகுதியானது என்று ஆரம்பத்திலேயே போதிக்கப்படுகிறோம். நமக்காகப் பரமபிதா எங்கு காத்திருக்கின்றார் என்றும் அவரை எங்கு எப்போதும் நாம் காணலாம் என்றும் "கடவுள் அந்தரங்கத்திலிருக்கிறார்" என்ற இவ்வருள் மொழிகளில் இயேசுநாதர் நமக்குக் கற்பிக்கிறார். தனி ஜெபம் அது இருக்கவேண்டிய விதத்தில் இருப்பதில்லை என்று கிறிஸ்தவர்கள் அடிக்கடி குறை கூறுகின்றனர். அவர்கள், தாங்கள் பலவீனரென்றும் பாவிகள் என்றும் உணர்கின்றனர். அவர்கள் இதயங்கள் உத்ஸாகமற்றும் இருள் நிறைந்துமிருக்கின்றன. அவர்களுக்கு ஜெபம் தேவையில்லாததுபோல் தோன்றுகிறது. ஜெபித்தாலும் விசுவாசமோ சந்தோஷமோ இல்லை.

தாம் விரும்புகிறபடி பிதாவை நெருங்கிச்சேர முடியாது என்கிற எண்ணத்தால் அவர்கள் அதைரியமடைகின்றனர். ஜெபத்தையும் கை விடுகின்றனர். தேவனுடைய பிள்ளையே! உன் பரம ஆசிரியராகிய ஆண்டவருக்குச் செவிகொடு. 'பிதா அந்தரங்கத்தில் இருக்கின்றார். எனக்காக அவர் அங்கு காத்திருக்கின்றார்' என்ற சிந்தனையே, நீ தனித்து ஜெபிக்கப் போகும்போது உனக்கிருக்க

வேண்டிய முதலாவது விஷயம் என்று அவர் உனக்கு அருளுகிறார் உனது இருதயம் அனலற்று ஜெபசிந்தையில்லாதிருப்பதால் அன்பின் தந்தையின் அருட்பிரசன்னத்திற்குள் நீ பிரவேசி. ஒரு உலகத் தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குவதைப்பார்க்கிலும் அதிகமாய் உன் பரமதகப்பன் உனக்கு இரங்குகிறார். கடவுளிடம் நீ எவ்வளவு கொஞ்சமாய்க் கொண்டு போகவேண்டியிருக்கிறது என்பதை நினையாமல், அவர் உனக்கு அதிகமாய் எவ்வளவு கொடுக்க விரும்புகின்றார் என்பதையே தியானி. நீ உன்னையே அவர் முன் அர்ப்பணம் செய்து, அவரது அருள்மிகுந்த திருமுகத்தை நோக்கிப் பார். அவரது அளவற்ற அன்பினை, அதிசயமான, ஒப்பற்ற அருள் மிகுந்த அன்பினையே சிந்தனைசெய். நீ எவ்வளவு பாவி, உன் இருதயம் எவ்வளவாகப்பாவத்தாலும், இருளாலும் நிறைந்து அனலற்றுப் போய்விட்டது என்பதைப் பற்றிமட்டும் அவரிடம் ஓலமிடு. அப்போது உன் இருதயத்துயரங்கள் வெயில்பட்ட பனிபோல் உலரும். பகலவனைக்கண்ட பங்கயம் போல் உன் உள்ளம் மலரும். பரமபிதாவின் அருள் ஒளியால் நீ உள்ளங்குளிர்ந்து உவகை பூப்பாய். இதற்கு நீ செய்ய வேண்டியது ஒன்றே. அதாவது நீ உன் அறை வீட்டுக்குள் புகுந்து, கதவை மூடி அந்தரங்கத் திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணுவதே யன்றி வேறொன்றும் செய்யத் தேவையில்லை. இது அதிசயங்களிலெல்லாம் அதிசயமன்றோ? தனிமையாய் எல்லையற்ற கடவுளை அணுகி, அவரது திருமுக தரிசனம் பெற்று ‘என் பரமபிதாவே’ என்று உள்ளம் உருக அழைப்பது எதத்னை பாக்கியம்!

‘அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்’.

இத்திருமொழிகளில் நமது ஆண்டவராகிய இயேசு இரட்சகர் அந்தரங்க ஜெபம் கனியற்றதாயிருக்க முடியாது என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறார். அதன் ஆசீர்வாதம் நம வாழ்க்கையிலே பரிமளிக்கும்.

அந்தரங்கத்திலிருக்கிற கடவுளோடு தனித்திருந்து, மனிதர் முன்பாக நமது வாழ்க்கையை அவரிடம் ஒப்படைக்கவேண்டும். அப்போது அவர் வெளியரங்கமாய்ப் பலன் அளிக்கிறார். முடிவற்ற பிதாத்துவ அன்போடும் விசுவாசத்தோடுமே கடவுள் நம்மை அந்தரங்கத்தில் சந்திக்கிறார் என்று ஆண்டவர் நமக்குக் கற்பிக்கிறார். நமது ஜெபம் நமக்கு ஆசீர்வாதத்தை நிச்சயமாய்க் கொண்டுவருகிறது என்ற சிறு பிள்ளையின் எளிய விசுவாசமே நமக்குத் தேவை என்கிறார். ‘தம்மைத்தேடி வருகிறவர்களுக்கு கடவுள் பலனளிக்கிறவர்’ என்ற உண்மையை அவரிடம் வருகிற ஒவ்வொருவரும் நம்பவேண்டியது அத்தியந்த அவசியமாகும். உள்ளறையில் கிடைக்

கப்பெறும் ஆசீர்வாதம் ஒருவனது பலத்த ஜெபத்தால் வருவதன்று. அவனது தேவைகளை நம்பி ஒப்படைக்கும் பரமதந்தையின் பரம அன்பினாலும் வல்லமையினாலுமே அப்பலன் கிட்டுகிறது. ஆகையினாலேயே, நமது ஆண்டவர் நம்மிடத்தில் ஒரு காரியத்தை எதிர் பார்க்கிறார். அதாவது உனது பரமபிதா அந்தரங்கத்தில் இருக்கிறார்; அந்தரங்கத்தில் பார்க்கிறார்; அந்தரங்கத்தில் கேட்கிறார் என்பதை நினைவு கூருக. அங்கே போய் அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவோடு தங்கியிரு. அவர் உன் விண்ணப்பத்திற்குப் பலனளிப்பார் என்ற திட நம்பிக்கையோடு அவ்விடத்தை விட்டு புறப்படுக. அவரை நம்பு; அவரையே சார்ந்திரு, பரமபிதாவுக்கு ஏறெடுக்கும் உத்தம ஜெபம் வீணாகாது. அவர் வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார் என்பதே.

நமது வாழ்க்கையிலேயே அதன் ஆசீர்வாதம் பிரகாசித்தொளிரும். அந்தரங்கமாக, கடவுளோடு நாம் ஒன்றுபட்டு மனிதர் முன்பாக நமது வாழ்க்கையையே அவர் வசம் ஒப்புக்கொடுக்க வேண்டியது ஒன்றுதான் நாம் செய்யவேண்டிய காரியம். அவரோ நமக்குப் பகிரங்கமாய் அவரது அருள் மழையைப் பொழிவார்.

கடவுளின் பிதாத்துவ அன்பில் வைக்கும் விசுவாசத்தை அல்லது பற்றினை உறுதிப்படுத்த, நமது அருமை இரட்சகராகிய கிறிஸ்து மேலும் கூறுகிற மூன்றாவது குறிப்பு யாதெனில், ' நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவையென்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் " என்பதே. மேலெழுந்தவாரியாக இதனைப் பார்த்தால், ஜெபம அவ்வளவாக அவசியம் இல்லை யென்பதுபோல் தோன்றலாம்: நமக்குத்தேவையானவை எவை என்பதைப்பற்றி நமக்குத் தெரிவதைப் பார்க்கிலும் கடவுளுக்கே அதிகம் தெரியும் என்று பொருள்படும் என்பது மெய்யே. ஆயினும், ஜெபத்தின் மெய்ப்பொருள் என்ன என்பதன் ஆழ்ந்த கருத்தினை நாம உணரும்போது, நமது விசுவாசத்தை இன்னும் பலப்படுத்துவதற்கு இச்சத்தியம் பெரிதும் பயன்படும். அச்சத்தியமாவது யாதெனில், புறச்சமயிகளின் ஜெபங்கள் போல் நமது ஜெபங்கள் இரா. ஏனெனில் அவர்களது ஜெபங்களில் வேண்டப்படும் தேவைகள்போல் நமது தேவைகள் இல்லை. அவர்களது ஜெபங்களில் கடலத்தனை சொற்களும் கடுகத்தனை கருத்தும் அடங்கி, ஆத்திர உணர்ச்சி தொனிக்கிறது. மேலும் அடியார் மீதருள் செய்ய ஆயத்தமாயிராத, அல்லது விருப்பமாயிராத கடவுளைக் கருணைக்காகக் கட்டாயப்படுத்துவது போலிருக்கின்றன அந்த ஜெபங்கள். அவற்றிற் கெடுத்துக்காட்டுகள் புறச்சமய நூல்களில் எண்ணற்றவை உள. ஆனால் நாம் விண்ணப்பிக்கும் பரம்பொருளோ, என்றும் எச்சமயத்திலும், தம்மை நோக்கிக் கூப்பிடுகிற எவருக்கும் அருள் செய்யக் காத்திருக்கின்றவரா யிருக்கின்றார்.

இவ்வுண்மையை நாம் அடிக்கடி மறந்து போகிறோம். பரவசம் தரும் பாமாலைகளைப்பாடிய பாவாணர்களும்கூட இதனை மறந்தே சில இடங்களில் பாடல்களை அமைத்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. ஆண்டவரின் மூன்றாவது போதனை, 'எனக்கு இது தேவை என்பதை எனது பரமபிதா மெய்யாகவே அறிந்திருக்கின்றாரா ?' என்ற வினாவை எழுப்புகிறது. வேதாகம மெய்ப்பொருளுக் கிசைந்தவாறு, "கடவுளுடைய மகிமைக்கு நமது விண்ணப்பம, இன்றியமையாது என்ற நிச்சயத்திற்கு நாம் பரிசுத்தாவியானவரால் ஒருதரமாவது நடத்தப்படும் பட்சத்தில், நாம் கேட்பது நமக்குத் தேவைதான் என்றும் அது நமக்கு அவசியம் வேண்டும் என்றும் நமது பிதா அறிந்திருக்கின்றார்" என்ற திடநம்பிக்கையை அது நமக்கு அருள்கிறது. அப்படிப்பட்ட விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், நாம விடாமுயற்சியோடும், உண்மையோடும், ஊக்கத்தோடும் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும என்பதையே அது வற்புறுத்துகிறது. பிதாவே! எனக்கு எது தேவை என்பதை நீர் அறிவீர். ஒரு சிசுவின் சுயாதீனத்தோடும, எளிமையோடும் ஜெபிப்பதையே கிறிஸ்து இரட்சகர் நமக்குள் வளர்க்க விரும்புகிறார். 'தேவனே நான் உமதண்டையில்—இன்னும் நெருங்கிச் சேர்வதே என் ஆவல் பூமியில்' என்று ஓலமிட்டு நமதுள்ளங்களில் பரிசுத்தாவியானவர் கிரியை செய்யும வரை கடவுளை நோக்கியிருப்போமாக. நமது பரமபிதா கருணையோடு நோக்குகிறார். கருணையோடு செவிகொடுக்கிறார் நமது தேவைகளை அவர் அறிந்திருக்கிறார் என்ற ஒப்பற்ற உண்மையை, நமது ஆத்திரத்திலும் அவசரத்திலும் செய்யும் விண்ணப்பங்களில் மறந்து விடாதிருப்போமாக. இயேசுவின் ஜெபப்பள்ளியில் புதிதாய்ச்சேர்ந்திருக்கிற நாம் இப்பாடங்களைக் கற்போமாக. பயிற்சி செய்வோமாக. அவற்றுள் நம்மைப் பரிபூரணப்படுத்துமாறு அவரை முற்றும் நம்புவோமாக. அந்தரங்கமாக கதவு மூடப்பட்ட நமது அறைவீட்டுக்குள் அதிக நேரம் செலவிடுவோமாக. வெளியுலகிலிருந்து விடுதலை பெறுவோமாக. கடவுளோடு ஒன்றுபடுவோமாக. அப்போது தான் ஆண்டவன் நமக்காக அங்கு காத்திருப்பார். அங்குதான் ஆண்டவராகிய நமது இயேசு பிரானும நமக்கு ஜெபிக்கப் போதித்தருள்வார். அந்தரங்கத்தில் நமது பிதாவோடு தனித்திருப்பதே நாம அடையும் அளத்தற்கரிய ஆனந்த பேரின்ப நிலையாகும். நமது பிதா அந்தரங்கமாக ஜெபிக்கும் நமக்கும வெளியரங்கமாகப் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையே நமது அன்றாட வாழ்க்கைக்கு அரணும் படைக்கலமுமாகும். நாம் கேட்பது நமக்குத் தேவைதான் என்று நமது பரம பிதாவுக்குத் தெரியும என்பதை நாம் அறிவது, நமக்குத் தேவையானவை யாவும் கிறிஸ்து இயேசுவிலிருக்கும அவரது ஐசுவரிய மகிமையின்படி நமக்குக் கிடைக்கும் என்பதை நிலைநாட்டும்.

'ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்.

நவவருட நன்றி நவிறல்

(ஸ்ரீமான் எஸ். ஜே நல்லையா ஐயர், திண்டுக்கல்)

நெஞ்சோடு நேர்ச்சை

அகவல்

*நவநன்றியிதே, நாயகற் கிதயம்
நல்கி அவன்றுணை நாளும் இறைஞ்சுவன் ;
அதிகாலையிலே அருணனுதிக்கையில்
அப்பன் கரந்தனில் அமைப்பேன் என்கரம் ;
பதியில் எந்தனின் பக்கமே நடப்பான்,
பாதை தவறாப் பதவழி காட்டுவான் ;
இனிய பரிவுடன் எம்மை நடாத்தி
இருளிலுந்திகையா திருக்கச் செய்வான் ;
முனியேன் 'ஏனென' மொழியேன், முழந்தாள்
முடங்க 'நின்சித்தம் முடிக்க' வென்பேன் ;
'இகமே துன்பம்', என இயம்பாது
" இறைவன் சித்தம் எனக்கினி" தென்பேன்,
காரணம் யாது? கரமது இறுக்க்
கரத்துடன் பிணைந்த காரியம் கண்டீர்
அநுதினம் இஃதே அல்லல் நீக்கும்,
ஆத்தும ஆகா ரத்தையும் அளிக்கும்,
உடலுக்கான ஆகாரத்தை
உடனுக்குடனே உழைக்கத்தருமே ;
இன்பேருசிப்பேன் ; ஆறுதலடைவேன் :
அருணனும் அடைவான் ; ஆனந்திப்பேன் ;
துன்பே ஒழியும் ; தூக்கங் கொள்வேன் ;
தோன்றிய ஆசிடை, துணை, பெரிதென்பேன் ;
நன்றிக்கை கூப்பி, நாதனைத் தொழுவேன் ;
நலமிடு அவன்கரத் தென்கர மிணைப்பேன் ;
'வென்றி' என்பேனே, வேட்ட இல்வாழ்க்கை
வீடடைந்திடவே, பிறரையும் விளிப்பேன் ;
வாழ்க நற்சிலுவை, வாழ்க எங்கோமான்
வாழ்க வெற்றிச்சபை, வானவர் சபையே ;
வெல்லுக தெய்வ வேந்தனின் அரசியல்
விரைவினில் வரவே வேண்டுவன் இகமே.*

"நல்ல பெண்மணி" என்ற மெட்டு

நல்ல மேய்ப்பனே—உயர்—நல்ல மேய்ப்பனே—இந்த
நானிலத்தின் பாவந்தீர்க்க வந்தவர் எவரோ—அவரே—நல்ல

1

அன்பு சாந்தம் அருளுடமை அற நெறியிலே—பே
ரின்ப மான பாதைநாடி இணைந்து வாழ்விலே
துன்பமான உலகை வெல்லத் தூயவராக—அருட்
ஜோதி மரி கன்னியிடம் தோன்றினர் எவரோ அவரே—நல்ல

2

மன்னுதி மன்னர் வாழ்ந்த மகிமையின் நாட்டில்—யூத
மகி மையின் நாட் டில்—ஏழை
கன்னி வயிற்றில் பாலனைகத் தான் பிறந்துமே
பன்னிரு சீடர் கூட்டிப் பாருலகிலே—மக்கள்
பாவம் தீர்க்கத் தம்முயிரை ஈந்தவர் எவரோ அவரே—

3

கொல்கதா மலைதனிலே குருதி சிந்தியும்—பல
கொடுமை களுக் காளாகித் தான் வருந்தியும்
கல் நெஞ்சம் படைத் தோர்க்காய் கண்ணீர்சிந்தியே—உயர்
கருணையோடு அவர்க்கிரங்கி மன்னித்தார் எவரோ அவரே—

பாலையா ஆசிரியர், எழுத்தாளர்,
தெ. இ. சபை, ஸ்ரீவில்லிபுத்தூர்.

கிருஸ்து அருட்குறள்

(பசுமலை வித்வான் வி.ப.கா. சுந்தரம்)

1. ஆதிமெய் வாக்காம அன்பின் வடிவினை
ஓதி உணர்க உளத்து.

(வாக்கு = வார்த்தை. ஆதியில் மெய்யான வார்த்தை யிருந்தது. அது தேவனாயிருந்தது. அதனை உள்ளத்தில் (உளத்து) ஜெபித்து உணர்வாயாக.

2. தேவனைக் காட்டும் திருப்பே ரொளியினை
ஆவலாய்க் காண்க அகத்து.

(கிறிஸ்து, கடவுளை நமக்குக் காட்டும் பெரிய ஒளி.
அகத்து = மனத்தில்)

3. வானமும் பூமியும் வாழ்ந்திடத் தோன்றிய
தீனர்க்கருள் தேவனைத் தேடு.

(தீனர்—வறியர், பிணியாளிகள்.)

4. யோவான் விடிமீன் உணர்த்தும் ஒளிமிகு
தேவாதி தேவனைத் தேடு.

(கிருஸ்து ஒரு சூரியன். சூரிய உதயத்திற்கு முன் விடி வெள்ளி தோன்றும். யோவான் முனிவரே விடிவெள்ளி. கிருஸ்துவுக்கு முன் தோன்றி அவரை உணர்த்தினர்.)

5. விண்ணோடு மண்ணிணைச் சேர்த்தருள் அண்ணலைப்
பண்ணோடு பாடிப் புகழ்.

(பூமியையும் வானத்தையும் இணைத்தார். அண்ணல் = பெருமைக்குரியவன். பண் = இசை).

6. அஞ்சவரும் பாவியருக்(கு) அஞ்சல்தரும் ரட்சகனை
வஞ்சமிலா நெஞ்சமதால் வாழ்த்து.

(அஞ்சவரும் பாவியர் = மற்றவர் அஞ்சும்படியான மிகக் கொடிய பாவிகள். லேகியோன், குஷ்டரோகிகள் முதலியோரைக் கண்டு மற்றவர் அஞ்சினர். அஞ்சல்தரும் ரட்சகன் = பயப்படாதே என்ற அடைக்கலத்தை அருள்கின்ற ரட்சகன்.)

7. காயை மதுரக் கனியாய்க் கனிவிக்கும்
நேயனை நெஞ்சுள் நிறுத்து.

(அநேகர் எட்டி முதலிய கசந்த பாவ வாழ்க்கை யுடையவர். பாவ வாழ்க்கையை ஜீவ வாழ்க்கையாக மாற்றுபவர் கிறிஸ்து. சவுலை பவுலாக்கினர். சூரிய ஒளியைப் பெற்று புளிக்கும் காயும் இனிக்கும் பழமாக மாறும். பாவியர் கிறிஸ்துவின் ஒளியைப் பெறுவாராக.

8. ஜீவனும் மெய்மையும் பாதையும் நானெனும்
தேவுனின் தாள் தினம் தேடு
(மெய்மை – சத்தியம். பாதை — வழி)

9. மன்னுயிர் ஈடேறத் தன்னுயிர் தந்தருள்
உன்னுயிர் அன்பினில் ஓங்கு.

10. ஒறுத்தார்க் கிரங்கி உருகிமன் னித்துப்
பொறுத்தார்ப் பொறையைப் போற்று.

Lenox Press, Pasumalai, 5—1—1954. 475 C.